www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Tsi10T

10-12-24

**தென்காசி மாவட்டம்**
**அரையாண்டு பொதுத் தேர்வு, டிசம்பர் - 2024**

-----

**வகுப்பு 10**
**தமிழ்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

**குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.**
**ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

**பகுதி – I (மதிப்பெண்கள் : 15)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **15x1=15**

1. 'மெத்த வணிகலன்' - என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது –
(அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
(ஆ) பெரும் வணிகமும் பெருங் கலன்களும்
(இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்
(ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. 'பாடுஇமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
(அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் (ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
(இ) கடல் நீர் ஒலித்தல் (ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது.
(அ) எழுவாய் (ஆ) வேற்றுமை உருபு (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்

4. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க

| | |
|---|---|
| (1) வாட்சன் | (i) கட்டுரை உருவாக்கம் |
| (2) இலா | (ii) இயந்திர மனிதன் |
| (3) பெப்பர் | (iii) செயற்கை நுண்ணறிவுக் கணினி |
| (4) வேர்டுஸ்மித் | (iv) உரையாடு மென்பொருள் |

(அ) (1) – (ii), (2) –(i), (3) –(iii), (4) –(iv) (ஆ) (1) – (iii), (2) –(iv), (3) –(ii), (4) –(i)
(இ) (1) – (iv), (2) –(ii), (3) –(i), (4) –(iii) (ஈ) (1) – (iii), (2) –(ii), (3) –(iv), (4) –(i)

5. "கோடை விடுமுறையில் ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன்" – இத்தொடரில் உள்ள வழுவமைதி :
(அ) கால வழுவமைதி (ஆ) இட வழுவமைதி
(இ) பால் வழுவமைதி (ஈ) திணை வழுவமைதி

6. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
(அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
(ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
(இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
(ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

7. "உனக்குக் கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் "கட்டுரை எழுதத் தெரியும்" என்று கூறுவது –
(அ) நேர் விடை (ஆ) உற்றது உரைத்தல் விடை
(இ) உறுவது கூறல் விடை (ஈ) இனமொழி விடை

8. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
(அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் (ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
(இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் (ஈ) அங்கு வறுமை இல்லாததால்

9. 'தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்' என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் -
(அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் (ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
(இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் (ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

10. அரசனின் அறம் சார்ந்த குறியீடுகளாகப் போற்றப்பட்டவை:
(அ) செங்கோல், மணிமுடி (ஆ) வெண்கொற்றக்குடை, சிம்மாசனம்
(இ) செங்கோல், வெண்கொற்றக்குடை (ஈ) மணிமுடி, சிம்மாசனம்

11. "பிரிந்தன புள்ளின் கானில்
பெரிதழுது இரங்கித் தேம்ப" பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.
(அ) கிளை, துளை (ஆ) நிலம், வாட (இ) காடு, வாட (ஈ) காடு, நிலம்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா"

12. இப் பாடல் இடம்பெற்ற நூல்
(அ) நீதி வெண்பா (ஆ) மலைபடுகடாம் (இ) திருவிளையாடற் புராணம் (ஈ) காசிக்காண்டம்

13. இப்பாடலின் ஆசிரியர்
(அ) பரஞ்சோதி முனிவர் (ஆ) கா.ப.செய்குதம்பிப் பாவலர்
(இ) பெருங்கௌசிகனார் (ஈ) அதிவீரராம பாண்டியன்

14. 'நுவன்ற' - இச் சொல்லின் பொருள்-
(அ) மாலை (ஆ) சொல்லிய (இ) குளிர்ந்த (ஈ) கேட்ட

15. அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
(அ) புண்ணிய, புலவீர் (ஆ) பண்ணிய, பொறுக்க
(இ) நுண்ணிய, நுவன்ற (ஈ) நுண்ணிய, தண்ணிய

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.
21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4x2=8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.
ஆ) கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.

17. உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

18. குறிப்பு வரைக - அவையம்.

19. 'இறடிப் பொம்மல் பெறுகுவீர்' - இத் தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

20. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

21. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 5x2=10

22. எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.
அ) எறும்புந்தன் கையில் எண்சாண் ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி

23. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) இயற்கை – செயற்கை ஆ) விதி - வீதி

24. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்
ஆ) வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

25. கலைச்சொற்கள் தருக. அ) Classical Literature ஆ) Cultural values

26. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

27. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

28. 'ஒலித்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** **2x3=6**

29. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவை என்பதற்குச் சான்றுகள் தருக.

31. **உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம். மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள் வரை மொழிபெயர்க்கப்படுகின்றன?

ஆ) தமிழ் நூல்கள் எந்த மொழிகளில் அதிக அளவு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன?

இ) மொழிபெயர்ப்பின் பயன் என்ன?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** **2x3=6**
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

33. "சித்தாளின் மனச் சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடம் சுட்டிப் பொருள் தருக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"அருளைப் பெருக்கி" எனத் தொடங்கும் நீதி வெண்பாப் பாடல்.

(அல்லது)

"நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க** **2x3=6**

35. அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கின்றான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

36. தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

37. **அலகிட்டு வாய்பாடு தருக.**

கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** **5x5=25**

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) மருந்தகம் ஒன்றில் வழங்கப்பட்ட மருந்து பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீங்கள் மருந்தகம் மீது நடவடிக்கை எடுக்குமாறு உரிய சான்றுகளுடன் சுகாதாரத்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) திறன்பேசிப் பயன்பாடு குறித்த அறிவுரைகளைக் கூறி வெளியூரில் உள்ள நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வீட்டு எண்.71-1, எழில் நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் தமிழ்வேந்தனின் மகள் மெல்லினா, கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மை மெல்லினாவாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கைக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) புயல் அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

1. புயலின் போது வெளியே செல்ல மாட்டோம்.
2.
3.
4.
5.

திருக்கோர்.மு, ஸ்ரீராம் மெட்ரிக் மே.நி.ப வல்லம்-627809 தென்காசி மாவட்டம்.

(அல்லது)

***மொழிபெயர்க்க.***

Respected ladies and gentleman, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil Culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have difined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should proud about our culture. Thank you one and all.

**பகுதி – V (மதிப்பெண்கள் : 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க** **3x8=24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தனின் தர்க்கத்திற்கு அப்பால் கதையின் வழி மனித நேயம் வெளிப்படுவதை விவரிக்க.

44. அ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில் தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45. அ) **குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.**

உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – உழவர்களை மதித்தல் – உணவை வீணாக்காமல் உண்ணுதல்.

(அல்லது)

ஆ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*****

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com